செ.வெ. எண்: 113.

நாள் 03.09.11

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா**

## அவர்களின் அறிக்கை - 3.9.2011

கரூர் மாவட்டம், சின்னதாராபுரம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணி புரிந்து வந்த திரு பால்ராஜ் என்பவர், **31.8.2011** அன்று இரவு சின்னதாராபுரம் கடை வீதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த போது, வாகனம் ஒன்று மோதியதில் படுகாயம் அடைந்து, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலன் அளிக்காமல் **2.9.2011** அன்று அதிகாலை உயிரிழந்தார் என்ற செய்தி அறிந்து நான் மிகுந்த துயருற்றேன்.

திரு பால்ராஜ் அவர்களின் அகால மரணத்தால் சொல்லொணா துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது மனைவிக்கும், குடும்பத்தாருக்கும் எனது அனுதாபத்தையும், இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடமையாற்றிக் கொண்டிருந்த போது காலமான சிறப்பு உதவி ஆய்வாளர் திரு பால்ராஜ் அவர்களின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து இரண்டு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்